செ.வெ.எண்:40 நாள்:23.02.2018

# பத்திரிக்கை செய்தி

## தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை

## கோமாரி நோய் தடுப்பூசி திட்டம் –14வது சுற்று–கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஜி.கோவிந்தராஜ்.இ.ஆ.ப.அவர்கள் தகவல்

தமிழகத்தில் 32 மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராமம் மற்றும் குக்கிராமங்களில் தேசிய கோமாரி நோய் தடுப்பூசித் திட்டத்தின் கீழ் இதுவரை 13 சுற்று தடுப்பூசிப்பணி முடிவடைந்துள்ளது.

தற்பொழுது 2018 மார்ச் 1– ம் தேதி முதல் 21–ம் தேதி முடிய **பதினான்காவது சுற்று** கோமாரி நோய் தடுப்பூசிப்பணி கரூர் மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் உள்ள 1,90,150 எண்ணிக்கை பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கும் போடப்பட உள்ளது.

இப்பணி செவ்வனே நடைபெறும் பொருட்டு, இந்நோய்க்கான 1,92,000 டோசஸ் ஊநீர் (Vaccine) அதற்கென உருவாக்கப்பட்ட குளிரூட்டும் அறையில் (Walk in Coolers) தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட நாளில், இத்தடுப்பூசி பணிக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசி குழுவினர் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் தற்போது உள்ள அனைத்து பசுவினம் மற்றும் எருமையினங்களை கணக்கிட்டு, அவையனைத்திற்கும் தடுப்பூசி போடப்படவுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் 100% கால்நடைகளுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இது தொடர்பாக கிராமப்புற விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து கிராமங்களிலும் 24–2–2018 அன்று நடைபெற உள்ள கிராம சபா கூட்டத்தில் கிராம மக்கள் அனைவரும் பங்கேற்று கால்நடை மருத்துவர்கள் கூறும் அறிவுரையின்படி கால்நடைகளை குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்து சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கோமாரி நோயானது குறிப்பாக கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயினால் இறப்புகள் குறைவாக இருந்த போதிலும், கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைவு மற்றும் எருதுகளின் வேலைத்திறன் குறைவு, கறவை மாடுகளின் சினைப்பிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகளினால் பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

மேலும், இந்நோய் பொதுவாக குளிர் மற்றும் பனிக்காலங்களில், நோய் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து கால்நடைகள் வாங்கி வருதல், சுகாதாரமற்ற கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடாமல் இருத்தல் ஆகிய காரணங்களினால், விரைவாக காற்றின்மூலம் பரவும் தன்மை கொண்டது. மேலும், இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர் சாணம் ஆகியவற்றால் மற்ற கால்நடைகளுக்கு பரவுகிறது.

எனவே, கரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயப் பெருமக்கள் தங்களது பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு மார்ச் 1–ம் தேதி முதல் 21–ம் தேதி முடிய ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் தடுப்பூசி குழுவினர் வருகையின் போது தங்களது கால்நடைகளுக்கு (கோமாரி நோய்) தடுப்பூசி தவறாமல் போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.